390

ஆச்சாரியாரின் ஆத்திரம்!

390
3. 62

பெரியார் ஈ. வெ. ரா.

தென்னார்க்காடு மாவட்ட
விடர் கழக வெளியீடு.

விலை 10 காசு.

R34
N62
18592

390

பெருமை யாருக்கு?

(14—5—61 கல்கி தலையங்கம்)

தமிழ் நாட்டுக் காங்கிரஸ் தனது கட்சிப் பிரசாரப் பொறுப்பு முழுவதையும் திரு. ஈ. வெ. ரா. அவர்களிடம் குத்தகைக்குப் பேசி விட்டிருப்பதாகத் தோன்றுகிறது. காங்கிரஸ் இந்தக் கதிக்கு வந்து விட்டது!

இந்தப் பிரசாரகர் ராஜாஜி ஆட்சியின் போது பல பள்ளிக்கூடங்கள் மூடப்பட்டன என்றும் திரு. காமராஜ் ஆட்சியில் பல பள்ளிக்கூடங்கள் திறக்கப் பட்டன என்றும் கணக்குச் சொல்லி வருகிறார். இந்தப் புள்ளி விவரங்கள் எவ்வளவு தூரம் உண்மை என்பதை நாம் அறிவோம்! நிற்க.

பள்ளிக்கூடங்கள் திறப்பதும் மூடுவதும் ஒரு நாட்டின் சுய ஆட்சியில் மிகவும் சாமான்யமான விஷயம்; அன்றாட நிர்வாகத்தைச் சேர்ந்த விஷயம்.

பள்ளிக்கூடங்கள் ஒரே ஊழல் மயமாக இருந்து நிர்வாகக் கணக்கு முதலியவைகள் சரியாக இல்லையென்றால் மூடுவதற்கு மந்திரி வரை கூடப் போகத் தேவையில்லை. கல்வித்துறை அதிகாரியே உத்தரவு பிறப்பித்து விடலாம்.

அதேபோல்தான் திறப்பு விஷயமும். ஒரு பள்ளிக்கூடம் திறக்கவேண்டும் என்றால் இவ்வளவு பரப்புள்ள நிலம் வேண்டும், கட்டடம் வேண்டும், பிள்ளைகள் விளையாட இவ்வளவு சதுர அடி கொண்ட மைதானம் வேண்டும், இவ்வளவு ஆசிரியர்கள் இருக்க வேண்டும் என்றெல்லாம் சட்ட திட்டங்கள் உள்ளன. இந்தச் சட்ட திட்டங்களைத் தங்கள் ஊரில் பள்ளிக்கூடம் திறக்க விரும்பும்

மக்கள் நிறைவு செய்தால் பள்ளிக்கூடங்கள் திறப்பதில் கஷ்டமில்லை. சர்க்காரிலும், மான்யம் அளிக்க நிதியிருந்தால், கல்வித் துறை அதிகாரியே, மேற்கூறிய சட்ட திட்டங்களுக்கு உட்பட்டுப் பள்ளிக்கூடம் ஏற்படுத்த வழியுண்டு என்பதைக் கண்டாரானால் உத்தரவு பிறப்பித்து விடுகிறார். இதுதான் நடைமுறை. இதைக்கொண்டு முதன் மந்திரியாக இருப்பவருக்குப் பெயரும் புகழும் சூட்டுவானேன்?

அப்படி மந்திரிக்குத்தான் இழுக்கோ பெருமையோ சூட்ட வேண்டும் என்றால் கல்வி மந்திரியாக இருந்தவருக்குத்தான் சூட்ட வேண்டுமே ஒழிய முதன் மந்திரிக்குச் சேராது.

181592

ராஜாஜி காலத்தில் கல்வி மந்திரியாக இருந்த திரு. சி. சுப்பிரமண்யம்தான் திரு காமராஜ் காலத்தில் இன்றும் கல்வி மந்திரியாக இருக்கிறார்.

கல்வித்துறை சம்பந்தமாக திரு. ஈ. வெ. ரா. கூறும் இழுக்கும், பெருமையும் ராஜாஜியையோ,— திரு. காமராஜ் அவர்களையோ சாராது — திரு. சி. சுப்ரமண்யம் அவர்களையே சாரும்.

இன்னொரு விஷயம். தற்போது மாகாண நிர்வாகத்துக்கு வரம்பற்ற தொகைகள் மத்திய சர்க்காரிலிருந்து பல காரணங்கள் சொல்லி 'கிராண்ட்'கள் பெறுவது வழக்கமாக இருக்கிறது. ஆனபடியால் சிக்கனத்தினால் ஏற்படும் கஷ்டங்கள் இல்லை.

முன்பு இப்படி யிருக்கவில்லை. மாகாணத்தின் செலவு மாகாணத்தின் வருமானத்துக்குள் அடங்க வேண்டியிருந்தது. இப்பொழுது டில்லிக்குக் காவடி எடுத்துச் செல்வதே நிர்வாகமாக இருக்கிறது. அதில் மான நஷ்டம் இருந்தாலும் இல்லறைச் செலவுகளுக்குப் பணம் குறைவில்லை.

ஆச்சாரியாரின் ஆத்திரம்!

எனது அருமை நண்பர் உயர்திருவாளர் ராஜாஜி அவர்கள் இந்த வாரம் (14—5—1961) 'கல்கி' இதழில் "பெருமை யாருக்கு?" என்ற தலைப்பில் இந்த நாட்டு முதலமைச்சர் — தமிழ் நாட்டின் ரட்சகர், காவலர் என்றெல்லாம், சுயநலம் மறந்த இன நல உணர்ச்சியுள்ள தமிழர்களால் பாராட்டப்படும் - திரு. காமராசர் அவர்களின்மீது உள்ள ஆத்திரத்தை, அணை உடைந்தது போல திறந்துவிட்டு எழுதியுள்ளார்.

என்னவெனில், ஆச்சாரியார் ஆட்சிக்காலத்தில் கொடுமைகளின் பட்டியலில் முதலிடம் வகிக்கும் பள்ளிக்கூட மூடு விழா பற்றி நான் ஊர்தோறும் பேசி வருவதைப்பற்றி ராஜாஜி எழுதியுள்ளார்.

கல்விக் கண்ணைப் பெறாதவாறு தமிழர்களைப் "பாதுகாத்தார்" மனுதர்மக்காவலரான ஆச்சாரியார் என்பதை நான் பல ஆண்டுகளாகவே கூறி வருகின்றேன். 1937ல் அவர் முதல் மந்திரியாக வந்தபோது 2500 பள்ளிகளை மூடியதன் மூலம் கல்வி ஒழிப்புப் பணியில் எவ்வளவு தீவிரமாக ஈடுபட்டு இருந்தார் என்பதையும், 1952ல் மறுமுறை முதல் மந்திரியாக வந்தபோது எப்படி சுமார் 6000 பள்ளிக்கூடங்களை மூடி, எஞ்சியுள்ள பள்ளிக்கூடங்களிலும் அரை நேரம் படித்தால் போதும்; மீதி நேரம் அவனவன் ஜாதித்தொழிலைச் செய்தால் போதும் என்ற கொலைபாதகக் குலக்கல்வித் திட்டத்தைக் கொண்டு வந்ததையும், அதை ஒழிக்க எடுத்துக்கொண்ட நமது முயற்சியையும் பற்றி நான் எடுத்துச்சொல்லி வருகிறேன். இதுபற்றி இவ்வாரம் தனது பத்திரிகையில் எழுதி "வெளுத்துவிட்டார்".

(யாரை, எதை, என்று கேட்காதீர்கள்!) அதைப் பற்றி ஆராய்வதுதான் இத் தலையங்கத்தின் நோக்கம்.

முதலாவது முக்கியமான ஒரு விஷயம் என்ன வென்றால் நாம் இதுவரை கூறிவரும் குற்றச் சாட்டாகிய "பள்ளிகளை இத்தனை ஆயிரக்கணக்கில் இவர் மூடியுள்ளார்" என்பது பற்றி சிலருக்கு லேசாக சந்தேகம் இருந்து வந்தது. 'இப்படிக்கூடவா செய்திருப்பார்? அதுவும் இராஜாஜியா இதைப்புரிந் திருப்பார்?' என்றெல்லாம் கூட சிலர் நினைத்திருக் கக்கூடும் அத்தகைய சந்தேகப் பேர்வழிகளுக்கு நமக்குப் பதிலாக இராஜாஜியே பதில் சொல்லி விட்டார். தன் மீது சாட்டப்பட்டுள்ள **குற்றச் சாட்டிற்கு சமாதானம் சொல்லியிருக்கிறாரே தவிர, குற்றச்சாட்டு தவறு என்று அவர் மறுத்து உரைக்க வில்லை!** இது ஒன்றே போதாதா, அவர் ஆட்சிக் காலம் தமிழர் கல்வி ஒழிப்புக்காலம் என்பதைப் புரிந்து கொள்ள?

நாம் கூறும் புள்ளி விவரம் பொய் என்றோ, புரட்டு என்றோ, இல்லாத கடவுளை இருப்பதாகச் சொல்லி வயிறு பிழைக்கும் பார்ப்பனக்கூட்டத்தின் பித்தலாட்டம் போன்றது என்றோ அவர் கூற வில்லை அவரால் கூற முடியவில்லை.

இனி அவரது சமாதானத்தின் — விளக் கத்தின் — யோக்கியதை என்னவென்று பார்க்க வேண்டும்.

1. "பள்ளிக்கூடங்கள் திறப்பதும் மூடுவதும் ஒரு நாட்டின் சுய ஆட்சியில் மிகவும் சாமான்யமான விஷயம்; அன்றாட நிர்வாகத்தைச் சேர்ந்த விஷயம்" என்கிறார். திரு. ஆச்சாரியார்.

இந்த "சாமான்ய" (அதாவது சாதாரணமான இந்த சிறு) விஷயத்தை நிர்வாகத்திறன் (நிபுணர்) உள்ள நண்பர் இராஜாஜி ஏன் தனது ஆட்சியில் செய்யவில்லை?

"சாமான்ய" முதல் மந்திரியாகிய திரு. காமராஜரால்தானே முடிந்தது? இந்த "சாமான்ய" விஷயத்தைக்கூட திரு. ஆச்சாரியார் அவர்கள் ஏன் செய்யவில்லை? மனமிருந்தால் மார்க்கம் உண்டாகி இருக்காதா? "அன்றாட நிர்வாகத்தைச் சேர்ந்த இந்த விஷயத்தைக்" கூட செய்யாத, செய்யத்தவறிய செய்ய மனமில்லாத ஒருவரை ஆட்சியில் அமர்த்தி யமைக்காக தமிழர்கள் "கழுவாய்" தேடவேண்டும் என்று நினைப்பதில் தவறு என்ன?

இந்த அன்றாட நிர்வாகத்தைச் சேர்ந்த, சாமான்ய விஷயமான கல்வியைக்கூட அந்த வாசனையை தெரியாத மக்களுக்குக் காட்டாதவரை மறுமுறை மக்கள் ஆட்சி பீடத்தை அலங்கரிக்க அனுப்பினால் அதைவிட, கொள்ளிக்கட்டையை எடுத்துத் தலையைச் சொரிந்து கொள்ளலாமே!

2. "பள்ளிக்கூடங்கள் ஒரே ஊழல் மயமாக இருந்து நிர்வாகக் கணக்கு சரியில்லை என்றால் மூடுவதற்கு மந்திரிவரையில்கூட போகவேண்டிய தில்லை. கல்வித்துறை அதிகாரியே உத்தரவு பிறப் பித்து விடலாம்" என்கிறார், ஆச்சாரியார்.

இந்த வாதத்தில் கூட நேர்மையும் இல்லை; கெட்டிக்காரத்தனமும் இல்லை என்று எண்ணிப் பரிதாபப்பட வேண்டியிருக்கிறது.

தனது ஆட்சிக்காலத்தில் "பள்ளி நிர்வாகம் ஒரே ஊழல் மயமாக இருந்தது" ஆனதால் அதைத் திருத்த முடியாமல் பள்ளிகளை மூடவேண்டியதா

யிற்று என்றால், அந்த ஊழல் மயம் திரு. காமராஜரின் எட்டு ஆண்டுக்கால ஆட்சியில் ஏன் இல்லை? இருந்திருந்தாலும் அந்தத் திரு. காமராஜரால் மாத்திரம் திருத்தி மேலும் பதினாயிரக் கணக்கில் புதுப் பள்ளி திறக்க முடிந்தது. இதிலிருந்தாவது ஆளுந் திறமை ஆச்சாரியார் அவர்களுக்கு இல்லை என்று விளங்குகிறதா இல்லையா?

அப்படித்தான் ஊழல் இருந்தால் 6000 ஆரம்பப்பள்ளிகளிலா இருந்திருக்கும்? அந்த 'ஊழலை' ஒழிப்பது புத்திசாலித்தனமா? அல்லது அடியோடு அந்த அமைப்பையே ஒழிப்பது புத்தி சாலித்தனமா? ஆஸ்பத்திரியில் எங்காவது 'ஊழல்' என்று புகார் திரு. ஆச்சாரியாருக்கு வந்தால், அந்த ஆஸ்பத்திரியையே மூடி விடலாம் என்றால் நோயாளிகள், பொதுமக்கள் நிலை என்னவாகும்? நல்ல நிர்வாகத்தின் கடமை என்ன? இது ஆச்சாரியார் அவர்களுக்குத் தெரியாதா என்ன? ஆச்சாரியாரின் சமாதானம் நோயைவிட சிகிச்சை மோசமாகவல்லவா இருக்கிறது!

எனவே ஊழல் இருந்தது என்று இவர் கூறுவதில், ஒன்று இது உண்மை அற்றதாக இருக்க வேண்டும். இல்லை உண்மை என்றால், அவருக்கு ஆட்சித்திறன் பூஜ்யம் என்பதையாவது அவர் ஒப்புக்கொள்ளவேண்டும்.

3. "அதேபோல்தான் திறப்பு விஷயமும். ஒரு பள்ளிக்கூடம் திறக்கவேண்டும் என்றால் இவ்வளவு பரப்பு உள்ள நிலம் வேண்டும்; கட்டடம் வேண்டும். பிள்ளைகள் விளையாட இவ்வளவு சதுர அடிகொண்ட மைதானம் வேண்டும், இவ்வளவு ஆசிரியர்கள் இருக்கவேண்டும் என்றெல்லாம் சட்ட திட்டங்கள் உள்ளன. இந்த சட்ட திட்டங்களை தங்கள் ஊரில் பள்ளிக்கூடம் திறக்கவிரும்பும்

மக்கள் நிறைவு செய்தால் பள்ளிக்கூடங்கள் திறப்பதில் கஷ்டமில்லை! சர்க்காரிலும், மான்யம் அளிக்க நிதியிருந்தால் கல்வித்துறை அதிகாரியே, மேற்கூறிய சட்டதிட்டங்களுக்கு உட்பட்டு பள்ளிக்கூடம் ஏற்படுத்த வழியுண்டு என்பதைக் கண்டாரானால் உத்தரவு பிறப்பித்து விடுகிறார். இதுதான் நடைமுறை. **இதைக்கொண்டு முதன் மந்திரியாக இருப்பவருக்குப் பெயரும் புகழும் சூட்டுவானேன்?''** என்று கேட்கிறார் இராஜாஜி.

சட்டமும் திட்டமும் இவர் காலத்தில் இல்லாமலா இருந்தது? சட்டம் போட்டு விட்டால் போதுமா? அதைஅமுல் படுத்துவதைப் பொறுத்துத் தானே இருக்கிறது. இவர் முதல் மந்திரியாக இருந்த போது 15000 ஆரம்பப் பள்ளிக்கூடங்கள் இருந்தது. இப்போது 27500 பள்ளிக்கூடங்கள் இருக்கின்றன வென்றால் 1952ல் இல்லாத இடமும், பள்ளி திறக்க வேண்டுமே என்ற ஆசையும் ஏன் காமராசர் காலத்தில் மட்டும் தோன்றவேண்டும்? காமராசர்ஏதாவது ''மாய மந்திர சக்தி'' படைத்தவரா? ஆச்சாரியார் காலத்து கல்வி அதிகாரிகள் ஏன் இப்படிச் செய்யாமல் மூடுவதில் கண்ணும் கருத்துமாய் இருந்தார்கள்?

சட்டதிட்டம் போட்டுவிட்டால் போதுமா? ஏட்டுச் சுரைக்காய் கறிக்குதவாதே. சர்க்கரைஎன்று எழுதிக் காட்டினால் நாக்கு தித்திக்கவா செய்யும்?

முதன் மந்திரியாக இருப்பவருக்கு இதற்காக ஏன் மாலை சூட்டுகிறீர்கள் என்று வெளிப்படையாக கேட்கிறார். திரு. ஆச்சாரியார் என்றால், திரு. காமராசர் தொண்டின் காரணமாக அக்கிரகாரத் தலைவர் அவர்களுக்கு உள்ள பொறாமை உணர்ச்சி எவ்வளவு ஆழமானது அதிகமானது என்பதற்கு இதைவிட வேறு எடுத்துக்காட்டு என்னவேண்டும்? ''காமராசரை மட்டும் புகழாதே வேறு எதையாவது சொல்லு'' என்று பச்சையாகவே கூறுகிறார். திரு. ஆச்சாரியார்.

4. "அப்படி முதன் மந்திரிக்குத்தான் இழுக்கோ, பெருமையோ சூட்டவேண்டும் என்றால் கல்வி மந்திரியாக இருந்தவருக்குத்தான் சூட்ட வேண்டுமே ஒழிய முதன் மந்திரிக்குச் சேராது" என்றும் எழுதுகிறார்.

"ராஜாஜி காலத்தில் கல்வி மந்திரியாக இருந்த திரு. சி. சுப்ரமணியம்தான் திரு. காமராசர் காலத்தில் இன்றும் கல்வி மந்திரியாக இருக்கிறார்."

"கல்வித்துறை சம்பந்தமாக திரு. ஈ. வெ. ரா. கூறும் இழுக்கும் பெருமையும் ராஜாஜியையோ, திரு. காமராசர் அவர்களையோ, சேராது. திரு. சுப்ரமணியம் அவர்களையே சாரும்" என்கிறார்.

இதை ஊன்றிப்படித்தால் ஆச்சாரியார் அவர்கள் தாம் தப்பித்துக்கொள்ளச்செய்யும் சாணக்கியம் நன்கு வெளியாகும். ஒரே கல்லில் இரண்டு மாங்காய் அடிக்க முயற்சித்துள்ளார். பள்ளி மூடியது திரு. சி. சுப்ரமணியம்தான் என்று அவர்மீது பழியைத் தூக்கிப்போட்டு தான் தப்பித்துக்கொள்ளலாம் என்று நினைக்கின்றார். அதேபோல் பள்ளிக்கூடங்கள் இத்தனை ஆயிரம் திறக்கப்பட்டன என்றால் அதுவும் திரு. காமராசரால் அல்ல. திரு. சுப்ரமணியத்திற்காவது செல்லட்டும் என்கிறார் இதுவும் கூட திரு. சுப்ரமணியத்தின்மேல் உள்ள அன்புகாரணமாக இல்லை. திரு. காமராசர் மீதுள்ள அளவுக்கு மீறிய பொறாமை காரணமான ஆத்திர உணர்ச்சியினாலேயே யாகும்.

காபினட் (Cabinet) மந்திரி சபையில் எந்த மந்திரி எந்த செயல் செய்தாலும் அதன் முழுப் பொறுப்பும் மந்திரிகளின் முதல்வரான முதல் மந்திரியையே சாரும் எபன்தில் அரசியல் நிர்வாகத்தின் அரிச்சுவடி அறிந்தவர்களுக்குக்கூடத்தெரியுமே!

அன்பர் ஆச்சாரியார் இதை அறியாதவரா? "ஜன நாயகத்தைக்" காப்பாற்ற அவதாரம் எடுத்துள்ள இவர் "ஜனநாயகத்தின்" அம்சம் (Cabinet responsibility) என்பது தெரியாதா?

ராஜாஜி காலத்தில் திரு. சி. சுப்ரமணியம் அவர்கள்தான் கல்வி மந்திரி. ஆச்சாரியார் கொண்டு வந்த கல்வித்திட்டத்திற்கு யார் உண்மைப் பொறுப்பாளி? திரு. சுப்ரமணியம் அவர்கள் சட்டப்படி (Technical) பொறுப்பே தவிர, அந்த சாதிக்கல்வித் திட்டத்தின் கர்த்தர் யார்? ஆச்சாரியார்தான் என்பது கல்லுப்போன்ற உண்மையல்லவா? இதை இவர் மறுக்க முடியுமா? கல்வித் திட்டத்திற்கும் கல்வி மந்திரிக்கும் பெயர் பொருத்தம் என்பதைத் தவிர மேறு எதில் சம்பந்தம் உண்டு?

அதே திரு. சுப்பிரமணியத்தைக் கல்வி மந்திரியாகப் போட்டே திரு. காமராசர், சாதி கல்வித்திட்டத்தை ஒழிக்கச் சொல்லவில்லையா? இன்று கல்வியைத் தீவிரப்படுத்துவதற்கு அவரையே பயன்படுத்தியுள்ளார். திரு. சி. சுப்பிர மணியம் அவர்களும் இனநலஉணர்ச்சியில்தோய்ந்து உள்ளபடியே உணர்ந்து காரியமாற்றுகிறார். அவருக்குப் பெருமையளிப்பதால் நான் என்னைப் பொறுத்தவரையில் அதுவும் வரவேற்கத் தகுந்தது தான் என்றே கருதி மகிழ்வேன். உண்மையான புகழ்ச்சி அல்ல. காமராசர் மீது எழுந்த, அவரது தொண்டு காய்த்து கனிந்து குலுங்குவதைக்கண்டு எழுந்த வெறுப்பில் பிறந்த புகழ்ச்சி என்பதாகும். சாதிக் கல்வித் திட்டத்தை ஒழித்தபோது சட்ட சபையில் திரு. சுப்பிரமணியம் அவர்கள் (I am still groping in darkness) நான் இருட்டில் தடுமாறிக் கொண்டுள்ளேன் என்று கூறினாரே. அதிலிருந்தே குலக் கல்வித்திட்டத்தைக் கொண்டுவந்தது எப்படி அவர் அல்லவோ, அப்படியே அதை ஒழித்ததும்

அவரல்ல என்பது விளங்கவில்லையா? அவரது தலைவர் திரு. காமராசர்தான் என்பதை மறைக்க முடியுமா?

5. “தற்போது மாகாண நிர்வாகத்துக்கு வரம்பற்ற தொகைகள் மத்திய சர்க்காரிலிருந்து பல காரணங்கள் சொல்லி ‘கிராண்ட்’கள் பெறுவது வழக்கமாக இருக்கிறது” என்று ஏதோ சமாதானம் கூறுகிறார்?

எந்தக் காரணத்தைச் சொல்லி கேட்டால் தான் என்ன? அதையே இவர் ஆட்சியிலிருந்தபோது ஏன் செய்திருக்கக்கூடாது? “பிச்சைப் புகினும் கற்கை நன்றே” என்பது இவருக்குத் தெரியாதா?

இதிலிருந்து, இவரது புதிய சீடகோடிகளான கண்ணீர்த்துளி “குரங்குப் படையினரும்” காமராசரைவிட டெல்லியிடம் செல்வாக்கைப் பயன் படுத்தி காரியம் சாதித்த பெருமை ஆச்சாரியாருக்கு உண்டு என்று இதுவரை அடித்துவந்த தம்பட்டம் இந்த வாதத்தினால் தரைமட்டம்ஆகிவிடவில்லையா ஒரு பொய்யைக் காப்பாற்ற ஒன்பது பொய்யல்லவா தேவைப்படுகிறது!

டெல்லியிடம் இதைப் பெறமுடியாத இவர் இன்று கூறுகிறார், நான் டெல்லியிடம், சண்டையிட்டு அதிக அதிகாரம் வாங்கப்போகிறேன் என்கிறார். உள்ளூரில் கூறை ஏறி கோழி பிடிக்கத் தெரியாத குப்பன் வெளியூரில் மலைக்காட்டில் யானை பிடிக்கப்போகிறேன் என்று கூறுவதுபோல் அல்லவா இருக்கிறது? கிராண்டே கொஞ்சம் அதிகமாய் வாங்கமுடியாத இவர் எங்கிருந்து அதிகாரங்களை வாங்கப்போகிறார்?

6. “இப்பொழுது டில்லிக்குக் காவடி எடுத்துச் செல்வதே நிர்வாகமாக இருக்கிறது. அதில் மான நஷ்டம் இருந்தாலும் சில்லறைச் செலவுகளுக்குப்

பணம் குறைவில்லை.'' என்று கூறுகிறார் ஆச்சாரியார்.

அதாவது மந்திரிகள் மானங்கெட்டு பிச்சை வாங்கி பள்ளிக்கூடங்களைத் திறந்து கல்வி அபிவிருத்திச் செய்கிறார்கள் என்கிறார். இதில்தான் நாம் உண்மையிலேயே அதிசயப்பட வேண்டியிருக்கிறது. ஆச்சாரியார் மானத்தைப்பற்றி பேசுகிறார். அது அவரது இனத்துக்கே பொருள் தெரியாமல் இத்தனை ஆண்டுகளாக இருந்துவரும் வார்த்தையாகும்.

இவர் முதல் மந்திரியாக இருந்தபோது டெல்லிக்கு ''காவடி'' தூக்காமல் வேறு என்ன செய்தார்? சொல்லட்டுமே!

181592

இன்றைய மந்திரிமார்கள் அப்படியே ''மானங்கெட்டு'' பணம் பெற்று வந்து செலவழிக்கிறார்கள் என்றால் அது அவரவர் வீட்டிற்கா? குடும்பத்திற்கா? தங்கள் குழந்தை குட்டிகளுக்கா? காமராசரோ, சுப்ரமணியமோ, அல்லது மற்ற மற்ற மந்திரிகளோ கடுகளவு சுயநலத்தோடு இக்காரியத்தில் ஆர்வம் காட்டுகிறார்கள் என்று யாராவது எங்காவது எடுத்துக்காட்ட முடியுமா? என்று அறைகூவிக் கேட்கிறேன்.

R34 N62

மானம்பார்க்கவேண்டியது தனிவாழ்க்கையில் தானே தவிர, பொது வாழ்க்கையில் மானம் என்ற சொல்லுக்கே வேலை இல்லை. 'வள்ளுவர் வாசகம்' தீட்டிய ராஜாஜிக்கு ''குடிசெய்வார்க்கில்லை பருவம் மடி செய்து மானம் பார்க்கில் கெடும்'' — என்ற குறள் தெரியாமற்போனது ஒரு ஆச்சரியம்தான்!

உண்மைப் பொதுத்தொண்டன் மானம் பாராது, தான் முந்துறும் பணிவடைக்காரனாகவே இருப்பான். அந்த இலக்கணத்தின்படியே மந்திரிகள் இருக்கிறார்கள் என்பது அவர்களது பெருமைக்கு மெருகேற்றும் பிரசாரமேதவிர, அழுக்கேற்றப் பயன் படாததாகும் என்பதை அன்பர் ஆச்சாரியார்

அறிந்து கொள்ளவேண்டும்.

அவ்வளவு பொங்கிவரும் ஆத்திர உணர்ச்சிக்கு அணைபோடாத நிலையில் ஆச்சாரியார் உள்ளார். அக்கிரகாரத்தின் ஆதிக்கம் என்ற கட்டு தளர்ந்து வருகிறதே, விரைவில் விழுந்து விடும் போலிருக்கிறதே என்ற பதட்டம் அவரை நிதானம் இழந்து இந்தப்படியெல்லாம் பேச, எழுதத் தூண்டுகிறது.

நான் என்னைப் பொறுத்தவரை அவரது ஆத்திர உணர்ச்சியைக்கண்டு கோபப்படத் தயாராக இல்லை. அதுபோல நம் இனத்தின் நலன் காக்க ஆத்திரத்தோடு பாடுபட. குஞ்சுகளைக் கொல்ல வரும் வான்பருந்தை வீழ்த்தத்துடிக்கும்தாய்க்கோழியாக யார் இருக்கிறார்கள், நம் இனத்தில்? என்று சுற்றிச் சுற்றிப் பார்க்கிறேன். இந்த பரந்த தமிழ் நாட்டில் காமராசர் என்ற ஒரு உருவத்தைத் தவிர என் கண்ணுக்கு வேறு உருவம் தென்படவில்லையே!

எஞ்சியுள்ளவர்கள் அனைவரும் பருந்தோடு முடிச்சுப்போட்டாவது பதவிக்குப் பல்லிளிக்கும் பரம "விபீஷணர்களாக, சுக்ரீவர்களாக, அநுமார்களாக"த்தான் இருக்கின்றார்கள்! இது நம் இனத்தின் நிலை. எனது அருமை அனுமார் தமிழர்களே! சுக்ரீவத் தமிழர்களே! விபீஷணத் தமிழர்களே! இப்போதாவது உங்கள் இனத்தின் இழி நிலையை உணருங்கள்!

நம் இனவரலாற்றில் படிந்துள்ள துரோகக் கறையை இரத்தக்கண்ணீர் விட்டாவது அழியுங்கள் ஆச்சாரியாரின் அளவுக்கு மீறிய ஆத்திரம் உங்களை நல்வழிப்படுத்தாதா, என்று ஆவலோடு எதிர் பார்த்து, அதை வரவேற்கிறேன்.

மானங்கெட்டு, மதிகெட்டு, இனத்தின் பிறவி எதிரியோடு காலடியில் இருப்பீர்களானால் வருங் கால சந்ததி உங்களை என்ன சொல்லும்? ஆழ்ந்து சிந்தியுங்கள். அதற்கு இதுவே நல்ல தருணம்.

ஈ. வெ. ராமசாமி.

படித்துவிட்டீர்களா ?

"காமராசர் ஆட்சியின் சாதனைகள்"

"ஆச்சாரியார் ஆட்சியின் கொடுமைகள்"

★ புத்தம் புதிய பதிப்பு

★ அத்தனையும் புள்ளி விவரங்கள்

★ மறுக்கமுடியாத ஆதாரக் குவியல்கள்

இவை தந்தை பெரியார் அவர்கள் பேசும் பொதுக்கூட்டங்களில் மலிவு விலையில் கிடைக்கும்.

மொத்தமாக வாங்குவோர்க்கு தனிச்சலுகை உண்டு

விபரங்கட்கு:

நிர்வாகி

பெரியார் மாளிகை

புத்தூர் — திருச்சி.

என்ற முகவரிக்கு எழுதவும்.

முருகுந்தன் அச்சகம், சிதம்பரம்.